திருக்குறளும் வேள்வியும்

ந.தட்சணாமூர்த்தி

அஞ்சல்துறை, கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை

திருக்குறள் உலகம் போற்றும் ஒப்பற்ற ஒரு நூல். திருக்குறளில் வேள்விக்கு எதிரான கருத்துகள் உள்ளன என்றும் அது வைதிகத்துக்கு எதிரானது என்றும் ஒரு கருத்து நீண்ட காலமாகச் சிலரால் கூறப்பட்டுவருகிறது. திருக்குறளில் கூறப்பட்டுள்ளவை இவ்வாறு வேள்விக்கும், வைதிகத்துக்கும் எதிரானவையா என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்னா செய்யாமை

திருவள்ளுவர் பிற உயிர்களுக்கு இன்னா செய்யக்கூடாது என்பதை, 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில் கூறுகிறார். 'கொல்லாமை' என்ற அதிகாரத்தில் பிற உயிர்களைக் கொல்லுதலைக் கடுமையாகக் கண்டித்து, கொல்லாமையைப் போற்றிக் கூறுகிறார். பிற உயிர்களைக் கொன்று அவற்றின் புலாலை உண்ணக்கூடாது என்பதை, 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார். 'வேள்வி என்பது உயிர்களைக் கொன்று நடத்தப்படுவது; எனவே வேள்விக்கு எதிரான கொள்கை உடையவர் வள்ளுவர்' என்பது சிலரது கூற்று.

வேள்வியும் விலங்குகள் பலியிடலும்

வேள்வி என்பது தெய்வங்களுக்கு உணவைத் தீயின் வழியாக அளித்து அந்த தெய்வங்களைத் துதித்துப் பாடி அவற்றின் அருளைப் பெறும் சடங்குமுறையாகும். உலகத்தின் பழங்கால சமயங்கள் அனைத்திலும் தாங்கள் உண்ணக்கூடிய உணவை தெய்வங்களுக்குப் படைத்தல் வழக்கமாகும். இன்றும்கூட நம் தமிழ்நாட்டிலும் கிராமங்களில் தெய்வங்களுக்குத் தாம் உண்ணக்கூடிய ஆடு, கோழி முதலியவற்றைக் கொன்று பலியிடுவது வழக்கமாக உள்ளது. வேள்வி என்றாலே விலங்குகளைக் கொன்று பலியிடுவது அல்ல. பெரும்பாலான வேள்விகள் நெய் முதலியன கொண்டே செய்யப்படுகின்றன. சில வகை வேள்விகளே விலங்குகளை பலியிட்டு செய்யப்பட்டன. இதன் காரணம் கருதத்தக்கது. ஆரியர் முதலில் மத்திய ஆசியாவில் வாழ்ந்து பின் இந்தியாவுக்குள் வந்தனர் என்பது ஆய்வறிஞர்கள் முடிவு. குளிர் மிகுந்த மத்திய ஆசிய மக்களின் உணவில் புலாலே முதலிடம் பெறும். எனவே அவர்களின் தெய்வ வழிபாட்டில் புலால் உணவைத் தெய்வங்களுக்கு அளித்தலே முதலிடம் பெற்றது. ஆனால் அவர்கள் பாரதத்துக்குள் வந்து இங்கிருந்த மக்களும் அவர்களும் ஒன்றுகலந்து பாரத சமுதாயமாக ஆன பின் புலால் உண்பதும் புலால் உணவைத் தெய்வங்களுக்கு அளிப்பதும் குறைந்து, நாளடைவில் புலால் வேள்வி முற்றிலும் மறைந்து, புலால் அற்ற வேள்வியே நடைபெற்று வந்தது.

வேதங்களுக்குப் பின்பாகவும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களுக்கு முன்பாகவும் தோன்றியது மனு தரும சாத்திரம். இது தருமசாத்திரங்களுள் காலத்தால் முந்தையது;

கட்டளைத்தன்மை (Authenticity) உடைய வைதிக நூலாகக் கருதப்படுவது. கீழே குறிப்பிடப்படும் மனுநூல் கருத்துகள் (மொழிபெயர்ப்புகள்) மேலே கூறப்பட்டவற்றைத் தெளிவாக்கும்.

'பிராணிகளைத் துன்புறுத்தாமல் மாமிசத்தைப் பெற முடியாது. பிராணிகளைத் துன்புறுத்தினால் மேல் உலகம் கிட்டாது. எனவே மாமிசம் உண்பதைத் தவிர்க்க வேண்டும்' என்று மனுநூல் சுலோகம் 5:48 கூறுகிறது. 'எந்த ஒரு உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பவன், கரையான் தனது புற்றை உருவாக்குவது போல் கொஞ்சம் கொஞ்சமாகப் பரலோகம் அடைவதற்கான புண்ணியத்தைச் சேர்க்கிறான்' என்ற கருத்தை சுலோகம் 4.238 கூறுகிறது. 'மாமிசத்தை பெறுவதன் இயல்பையும் பிராணிகளைக் கட்டிவைத்துக் கொல்லும் கொடுமையையும் நன்கு உணர்ந்து (பிராமணன்) மாமிசம் உண்பதை அறவே விட்டுவிட வேண்டும்' என்கிறது மனுநூலின் சுலோகம் 5:49. எனினும், முற்காலத்தில் செய்யப்பட்ட வேள்விகளில் விலங்குகள், பறவைகளின் இறைச்சி உணவு பயன்படுத்தப்பட்டதால், வேள்விகளில் மட்டும் புலால் பயன்படுத்தலாம் என்று சுலோகங்கள் 5.22, 5.23 ஆகியன கூறுகின்றன. 'வேள்விகளில் வேத மந்திரம் கூறி புனிதமாக்கப்பட்ட புலாலை மட்டும் துவிஜர்கள் (பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியோர்) உண்ணலாம்; இதனால் பாவம் ஏற்படாது; இவ்வாறே சிரார்த்தத்திலும் உண்ணலாம்; மற்றபடி புலால் உண்ணக்கூடாது; உணவுக்காக புலால் உண்பது அரக்க குணம்' என்று சுலோகங்கள் 5.27, 5.31, 5.32, 5.33,5.36, 5.41 ஆகியவை கூறுகின்றன.

இவ்வாறாக, வைதிகம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றைப் பெரிதும் வற்புறுத்தினாலும், பழைமையைப் பின்பற்றி விலங்குகளைப் பலியிட்டுச் செய்யும் வேள்விகளையும், பலியிட்ட புலாலைப் புசித்தலையும் அது விதிவிலக்காக அனுமதித்தது. காலப்போக்கில் அதுவும் மறைந்துவிட்டது. (துவிஜர்களான பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியோர் புலால் உண்ணக்கூடாது என்று மனுநூல் கூறினாலும் காலப்போக்கில் பிராமணர் மட்டுமே புலால் உண்ணாமையைக் கடைப்பிடித்தனர், சத்திரியர், வைசியர்களில் பலர் இதைக் கடைப்பிடிக்கவில்லை)

வள்ளுவரின் அறமும், மறமும்

அறக்கருத்துக்களை உயர்நிலையாக (ideal) வற்புறுத்தும் நூல்கள் நடைமுறை அறிவைப் போதிக்கும்போது அந்த அறக்கருத்துகளுக்கு விதிவிலக்கானவற்றைக் கூறுவதையும் காணலாம். வள்ளுவரும் இவ்வாறே இன்னா செய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமையை உயர்நிலையாக அறத்துப்பாலின் துறவறவியலில் கூறினாலும், பொருட்பாலில் இவற்றுக்கு விதிவிலக்கானவற்றைக் கூறுகிறார்.

"கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்" (குறள்-550)

என்ற குறளில் அவர், 'மன்னன் கொடியாரைக் கொலை செய்து தண்டித்தல் களையெடுத்தல் போல நன்று' என்கிறார். 'படைமாட்சி' (அதி.77), 'படைச்செருக்கு' (அதி.78) ஆகிய அதிகாரங்களில் எதிரிகளைக் கொல்லும் படையைப் போற்றிக் கூறுகிறார். வீரம் மிகுந்த படைக்குப் புலால் உணவு தேவை என்பது வெளிப்படை. எனினும் வீரப்படையையே வள்ளுவர் போற்றுகிறார்.

"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை" (குறள்-861)

Scanned with OKEN Scanner

என்ற குறளில், 'பலமற்ற எதிரிகள் மேல் போர் மேற்கொண்டு அவர்களை வெல்லுதலை விரும்புக' என்கிறார். 'பகைவரிடத்தில் மென்மையை மேற்கொள்ளக்கூடாது' என்று குறள்-877ல் கூறுகிறார். 'எதிரி வளர்வதற்கு முன் அவனை அழித்துவிட வேண்டும்; அவன் வளர்ந்து விட்டால் நம்மை அழித்துவிடுவான்' என்ற கருத்தை ஓர் உவமை மூலம் குறள்-879ல் கூறுகிறார். வள்ளுவர் கூறும் இன்னா செய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய பொதுக்கருத்துகளுக்கு மாறாக, நடைமுறைக்குத் தேவையான விதிவிலக்குகளையும் அவர் ஏற்பவர் என்பதை இவை தெளிவுபடுத்தும். இது போன்றே, இன்னா செய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றை வைதிகம் பொதுவிதியாகக் கூறினாலும், வேள்விகளில் புலாலை தெய்வங்களுக்குப் பலி தருவதை விதிவிலக்காகவே கூறியிருக்கிறது. எனவே வள்ளுவருக்கும் வைதிகத்திற்கும் கருத்து முரண்பாடு இல்லை என்பது தெளிவாகும். திருக்குறள் கூறும் புலால் உண்ணாமையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருபவர்கள் வைதிக பிராமணர்களே என்பது இங்கு கருதத்தக்கது. சிலர், 'கொலை வேள்வி' என்று பழிப்பர். உணவுக்காக நாள்தோறும் எண்ணற்ற உயிர்கள் கொல்லப்படுவது பழங்காலத்திலும் தற்காலத்திலும் நடைபெற்றுவரும் ஒன்றாகும். இது குற்றமாகக் கருதப்படுவதில்லை. அந்த உணவை தெய்வங்களுக்கு படைத்தலை மட்டும் குற்றமாகக் கருதுதல் சரியல்ல.

வேள்வி பற்றி வள்ளுவரின் கருத்துகள்

வள்ளுவர் வேள்விக்கு எதிரானவர் என்போர் பின்வரும் குறளை எடுத்துக்காட்டுவர்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள் – 259)

என்ற குறள் மூலம் வள்ளுவர் வேள்வியைத் தாழ்த்தியும், வேள்விக்கு எதிராகவும் கூறியுள்ளார் என்று அவர்கள் கூறுவர். இக்குறளுக்கு உரையாசிரியர்கள் கூறும் பொருள், 'அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதை விட ஒரு உயிரையும் கொன்று உண்ணாமையைக் கடைப்பிடிப்பது நன்று' என்பது. இங்கு வள்ளுவர் புலால் உண்ணாமையை உயர்த்திக் கூறியிருக்கிறாரே தவிர வேள்வியைத் தாழ்த்திக் கூறவில்லை. 'என் காதலி அனிச்சம்பூவை விட மென்மையானவள்' என்று கூறும்போது அனிச்சம்பூ தாழ்ந்தது என்று பொருள் அல்ல. உயர்ந்த ஒன்றைக்கூறி அதைவிட உயர்ந்தது இது என்று ஒப்பிட்டுக் கூறுதல் உறழ்வுவொப்பு என்ற இலக்கணத்தைச் சார்ந்தது. அவ்வகையிலேயே இங்கு ஒப்பிடப்பட்டுள்ளது. தாழ்ந்ததையும் உயர்ந்ததையும் எதிராகக் கூறும் எதிர் ஒப்பு வகையைச் சேர்ந்தது அல்ல இது. வள்ளுவர் வேள்வியை உயர்வாகக் கருதியதால்தான் புலால் உண்ணாமையை அதனுடன் ஒப்பிட்டு அதைப் பெருமைப்படுத்துகிறார் என்பதை உணரலாம். இதை வேறு சில குறள்களின் மூலமும் அறியலாம்.

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்" (குறள்- 87).

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார்" (குறள்- 88)

என்ற குறள்களில் விருந்தோம்பலை ஒரு வேள்வியாக உருவகப்படுத்தி உயர்த்திக் கூறுவதால் அவர் வேள்வியை உயர்வாகவே கருதுகிறார் என்பது மேலும் தெளிவாகும்.

"செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்

ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (குறள் – 413)

Scanned with OKEN Scanner

என்ற குறளில், 'செவிச்செல்வம் உடையவர்கள் வேள்வியில் அவியுணவு கொள்ளும் தேவருக்கு இணையாக இப்புவியில் வாழ்பவர்' என்று கூறி செவிச்செல்வத்தை அவியுணவுடன் ஒப்பிட்டு வள்ளுவர் புகழ்வதால் அவர் வேள்வியை உயர்வாகக் கருதுவதை இக்குறளும் நன்கு விளக்கும்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று' என்ற குறளின் கருத்துக்கு ஒத்த கருத்தை வைதிக நூலான மனு தரும நூலும் கூறுகிறது. '100 ஆண்டுகளாக ஆண்டுக்கு ஒரு அஸ்வமேதயாகம் செய்பவன் பெறுகின்ற புண்ணிய பலனும் புலால் உண்ணாத விரதத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவன் பெறும் புண்ணிய பலனும் சமமானது' என்று அது கூறுகிறது (சுலோ.5.53). திருக்குறள் புலால் உண்ணாமையை வேள்வியுடன் ஒப்பிட்டுப் மிகவும் உயர்த்திக் கூறுவது போலவே மனுநூலும் புலால் உண்ணாமையை வேள்வியுடன் ஒப்பிட்டுப் மிகவும் உயர்த்திக் கூறுகிறது. 'வேட்டலின்' என்பதில் உள்ள 'இன்' என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு, 'வேட்டலைவிட' என்ற உறழ்வுவொப்புப் பொருளையும் தரும்; 'வேட்டலைப் போல' என்ற உவமவொப்புப் பொருளையும் தரும். 'வேட்டலினும்' என்று 'இன்' உடன் 'உம்' என்ற சிறப்பும்மை சேர்ந்து வந்தால் 'வேட்டலை விட' என்ற உறழ்வுவொப்புப் பொருளை அது உறுதியாகத் தரும். சில சமயம் இந்த 'உம்' மறைந்து நின்று உறழ்வுவொப்புப் பொருள் தருதலும் உண்டு. பல உரையாசிரியர்கள் 'வேட்டலைவிட' என்றே பொருள் கொண்டு மேலே கூறியவாறு உரை கூறியுள்ளனர். இக்குறளில் 'உம்' வராததால் 'வேட்டலின்' என்பதற்கு 'வேட்டலைப் போல' என்பது இயல்பான பொருள். அப்படிப் பொருள் கொண்டால், 'ஒரு உயிரையும் கொன்று உண்ணாமையைக் கடைப்பிடித்தல், அவி சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்தலைப் போல நன்று' என்று இக்குறள் பொருள் தரும். மனுதர்ம நூல் கூறும் கருத்தை அப்படியே ஒத்தது இது. எப்படி இருப்பினும் திருக்குறள் கூறும் கருத்துடன் ஒத்த கருத்தையே வைதிக நூலான மனுநூலும் கூறுகிறது என்பது தெளிவு. எனவே இக்குறளைக் கொண்டு திருக்குறள் வைதிகத்துக்கு எதிரானது என்று கூறுதல் முற்றிலும் தவறானது என்பது தெளிவாகும்.

வேதங்கள் என்பவை வேள்வித் துதிப்பாடல்களையும் வேள்வி முறைகளையும் கொண்ட நூல்கள். பார்ப்பனர்கள் வேதங்களைக் கற்று வேள்விகளைச் செய்பவர்கள். வேத வேள்விகள் செய்வதன் மூலம் தெய்வ அருள் கிடைத்து மன்னனும் நாட்டு மக்களும் துன்பங்கள் இன்றி செழிப்புடன் இருப்பர் என்ற கருத்தின் அடிப்படையிலேயே பழங்காலத்தில் மன்னர்களாலும் மற்றவர்களாலும் வேள்விகள் மிகப்பெரும் எண்ணிக்கையில் செய்யப்பட்டுவந்தன. அந்தணரின் வேதக்கல்வி சீர்குலைந்தால் தெய்வ அருள் குன்றி நாடு சீர்கெடும் என்று கருதப்பட்டது. வள்ளுவரும் இவ்வாறே கருத்து உடையவர் என்பதைப் பின்வரும் குறள்கள் காட்டுகின்றன.

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" (குறள் – 134)

என்ற குறளில், 'பார்ப்பான் வேதத்தை மறந்துவிட்டாலும் அவன் மீண்டும் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவன் ஒழுக்கம் குன்றிவிட்டால் அவனது பிறப்பின் பெருமை கெட்டுவிடும்' என்று வள்ளுவர் கூறுவதால் வேதவேள்விகள் செய்யும் பிராமணப்பிறப்பு பெருமை உடையது என்று அவர் கருதுவதை அறியலாம்.

"அந்தணர் நூற்கும் அறத்துக்கும் ஆதியாய்

நின்றது மன்னவன் கோல்" (குறள் – 543)

என்ற குறளில், 'அந்தணர் வேதநெறியில் நிற்பதற்கும் அறம் நிலைபெறுவதற்கும் காரணமாய் அமைவது அரசனின் செங்கோலே' என்று வள்ளுவர் கூறுகிறார்.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின்" (குறள் -560)

என்ற குறளில், 'அரசன் கொடுங்கோலனாய் இருந்தால் நாட்டில் பசுக்கள் பால் தருவது குன்றிவிடும்; அந்தணர்கள் வேதங்களை மறந்துவிடுவார்கள்' என்று கூறுகிறார். இவற்றாலும் வள்ளுவர் வேதவேள்வியையும், வேதம் கற்று வேள்வி செய்யும் பார்ப்பனரையும் உயர்வாகவே கருதினார் என்பது தெளிவாகும்.

முடிவுரை

மேலே கூறியவற்றில் இருந்து வள்ளுவர் வேதத்தையும், வேள்வியையும் பிராமணர்களையும் போற்றித்தான் கூறியிருக்கிறாரே தவிர தாழ்வாகவோ, எதிராகவோ கூறவில்லை என்பதை நன்கு அறியலாம். இதனால், வள்ளுவர் வேள்விக்கும், வைதிகத்துக்கும் எதிரானவர் என்றும் ஆரியத்துக்கு எதிரானவர் என்றும் கூறப்படும் கூற்றில் உண்மை இல்லை என்று அறியலாம்.

துணை நூல் பட்டியல்

1. திருவள்ளுவர், **திருக்குறள்.**
2. Buhler, G. (Tr), The Laws of Manu, Sacred Books of the East series Vol. 25, London, 1886.